# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

# 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன் பாட்டொழுங்கு (கு.அ.உ.ச.உ.) சட்டம்

*(2007 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

2007, நவெம்பர் மாதம் 16 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்கு (கு.அ.உ.ச.உ.) சட்டம்**

[*2007 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*.]

*ச.வ.ஓ. 30/2007*

**சட்டவாக்க வழிமுறைகள் ஊடாக அங்கீகாரமளிக்கப்படாத மனித உரிமைகள் தொடர்பான குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்கிலுள்ள (கு.அ.உ.ச.உ.) குறித்தசில உறுப்புரைகளுக்குப் பயனளிப்பதற்கும் அதனோடு தொடர்புடைய அல்லது அதற்கு இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*1966, திசெம்பர் 16 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் 1976, மாச்சு 23 ஆம் தேதி வலுவுக்கிடப்பட்டதுமான குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்கிற்கு இலங்கை ஒரு அரசு திறத்தவராக இருப்பதனாலும் :* முன்னுரை.

*மேற்கூறப்பட்ட உடன்பாட்டொழுங்கை இலங்கை 1980, யூன் 11ஆம் தேதியன்று ஏற்று அங்கீகரித்துள்ளதாதலாலும் :*

*உடன்பாட்டொழுங்கில் குறிப்பீடுசெய்யப்பட்ட குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளின் கணிசமானதொரு பாகம் இலங்கை அரசியலமைப்பிலும் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட வேறு சட்டவாக்கத்திலும் சட்டவாக்க அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள தாதலாலும் :*

*மேற்கூறப்பட்ட உடன்பாட்டொழுங்கில் குறிப்பீடு செய்யப்பட்ட வையும் இன்னமும் போதியளவு சட்டவாக்க அங்கீகாரம் அளிக்கப்பெறாதவையுமான அக்குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்குப் பயனளிப்பதற்கென தோதான சட்டவாக்கம் செய்வது இலங்கை அரசாங்கத்திற்கு அவசியமாக வந்துள்ளதாத லாலும் :*

*இப்போது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—*

**1.** *இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க, குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட் டொழுங்குச் சட்டம் (கு.அ.உ.ச.உ.) என எடுத்துக்காட்டப்படலாம்.* சுருக்கப் பெயர்.

2 – PL 002501 – 1,400 (2007/10)

சட்டத்தின் முன் ஆளொருவராக அங்கீகரிக்கப் படுவதற்கான உரிமை.

**2.** சட்டத்தின் முன் ஆளொருவராக அங்கீகரிக்கப்படுவதற்கான உரிமை ஒவ்வோராளுக்கும் இருத்தல் வேண்டும்.

ஆளெவரும் போரைப் பரப்புத லாகாது.

**3.** (1) ஆளெவரும் போரைப் பரப்புதலோ அல்லது பாரபட்சத்தை, எதிர்ப்பு உணர்ச்சியை அல்லது வன்முறையைத் தூண்டுவதாக அமையும் தேசிய, இன அல்லது மத ரீதியிலான பகைமையை ஆதரித்தலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் தவறொன்றை :–

(அ) புரிவதற்கு எத்தனிக்கும் ;

(ஆ) அதனைப் புரிவதில் உதவிபுரியும் அல்லது உடந்தையாயிருக்கும் ; அல்லது

(இ) புரியப்போவதாக அச்சுறுத்துகின்ற,

ஒவ்வோராளும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) இப்பிரிவில் (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிந்தமைக்குக் குற்றவாளியாகக் காணப்பட்ட ஆளொருவர் மேல் நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது பத்து ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்குக் கடூழிய மறியற்றண்டனையால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழான தவறொன்று பிடியாணையின்றி கைது செய்யப்படற்பாலதும் பிணையில் விடுவிக்கப்படமுடியாததும் ஆதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தவறொன்றுக்காக சந்தேகிக்கப்பட்ட அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட ஆளெவரும் விதிவிலக்கான சூழ்நிலைகளில் மேல் நீதிமன்றத்தினால் தவிர பிணையில் விடுவிக்கப்படுதலாகாது.

(5) இப்பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிந்தமைக்கு எவரேனும் ஆளுக்கெதிராக மேல் நீதிமன்றத்திலுள்ள விளக்கமொன்று அந்நீதிமன்றத்தின் வேறு ஏதேனும் அலுவலுக்கு முன்பதாக எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் நாளாந்த அடிப்படையில் நடைபெறுதலும் வேண்டும். அத்துடன் பதிவுசெய்யப்பட வேண்டிய தவிர்க்கமுடியாத எவையேனும் சூழ்நிலைகள் காரணமாக தவிர பிற்போடப்படுதலாகாது.

(6) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்கு "உடந்தையாயிருத்தல்" என்பது, தண்டனைச் சட்டக்கோவையின் 100 ஆம் பிரிவிலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*சார்த்துரைக்கப்பட்ட தவறாளர் ஒருவரின் உரித்துடைமை.*

**4.** (1) எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் குற்றவியல் தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவர் —

(அ) அவரது சமூகமளித்தல் விளங்கப்படும் வாய்ப்பொன்றை அளிக்கப்பெறுவதற்கும் ;

(ஆ) நேரிலோ அல்லது தாமாகவே தேர்ந்தெடுத்த சட்ட உதவியின் ஊடாக எதிர்வாதம் கூறுவதற்கும் அத்துடன் அத்தகைய உதவி எதுவும் அவருக்கு இல்லாதவிடத்து அந்த உரிமை பற்றி அறிவிக்கப்படுவதற்கும் ;

(இ) நீதியின் அக்கறை அவ்வாறு தேவைப்படுத்துமிடத்தும் தோதான விடயங்களில் அத்தகைய சட்ட உதவிக்கான கொடுப்பனவைச் செய்வதற்கு அவர் போதிய வழி வகைகளைக் கொண்டிராதவிடத்து அவரால் கொடுப்பனவு எதுவும் இல்லாமலும் தமக்கு குறித்தொதுக்கப்பட்ட சட்ட உதவியைக் கொண்டிருப்பதற்கும் சட்ட உதவியைக் குறித்தொதுக்கிக் கொள்வதற்கும் ;

(ஈ) அவருக்கெதிரான சாட்சிகளை விசாரிப்பதற்கும் அல்லது விசாரிக்கச் செய்வதற்கும் அவருக்கெதிராக அழைக்கப்பட்ட சாட்சிகளுக்குப்போன்று அதே நிபந்தனைகளின்கீழ் அவர்சார்பில் சாட்சிகளின் வருகையைப் பெறுவதற்கும் ;

(உ) விளக்கம் நடாத்தப்படும் மொழியை அத்தகைய ஆளினால் விளங்கிக் கொள்ளவோ அல்லது பேசவோ

இயலாதவிடத்து உரைபெயர்ப்பாளர் ஒருவரின் உதவியைப் பெறுவதற்கும் ; அத்துடன்

(ஊ) அவருக்கெதிராக சாட்சியமளிக்குமாறு அல்லது குற்ற ஒப்புதல் செய்யுமாறு கட்டாயப்படுத்தப்படாதிருப்ப தற்கும்,

உரித்துடையவராதல் வேண்டும்.

(2) எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் குற்றவியல் தவறொன்றுக்கக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஒவ்வோராளும் ஏதேனும் அத்தகைய குற்றத் தீர்ப்பிற்கும் விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டனைத் தீர்ப்பிற்கும் எதிராக மேலான நீதிமன்றமொன்றுக்கு மேன்முறையீடு செய்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஆளொருவர் எந்தக் குற்றவியல் தவறொன்றுக்காக சட்டத்திற்கிணங்க ஏற்கனவே குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளாரோ அல்லது விடுதலைப்பட்டுள்ளாரோ அத்தகைய ஏதேனும் குற்றவியல் தவறுக்காக அத்தகைய ஆள் விளங்கப்படுதலோ அல்லது தண்டிக்கப்படுதலோ ஆகாது.

*சிறுவர் ஒருவரின் உரிமைகள்.*

**5.** (1) சிறுவர் ஒவ்வொருவருக்கும் —

(அ) அவரின் அல்லது அவளின் பிறப்பைப் பதிவுசெய்து கொள்வதற்கும் அவரின் அல்லது அவளின் பிறந்த தேதியிலிருந்து பெயரொன்றைக் கொண்டிருப்பதற்கும்;

(ஆ) நாட்டினத்தைப் பெறுவதற்கும் ;

(இ) முறைகேடாக நடத்தப்படுவதினின்று, அசட்டை செய்யப் படுவதினின்று, துஷ்ப்பிரயோகம் செய்யப்படுவதினின்று அல்லது இழிவுபடுத்தப்படுவதினின்று பாதுகாக்கப்படுவதற்கும் ; அத்துடன்

(ஈ) கணிசமான அநீதி வேறுவகையாக விளையுமாயின், சிறுவரைப் பாதிக்கும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் அரச செலவில் அரசினால் சட்ட உதவி வழங்கப் படுவதற்கும்,

உரிமையுண்டு.

(2) சிறுவர்கள் தொடர்பிலான எல்லாக் கருமங்களிலும் அவை பகிரங்க அல்லது தனியார் சமூக நலம்பேணல் நிறுவனங்களி னால் பொறுப்பேற்கப்படினும் சரி, நீதிமன்றங்களினால், நிர்வாக அதிகாரசபைகளினால் அல்லது சட்டவாக்கக் குழுமங்களினால் பொறுப்பேற்கப்படினும்சரி, சிறுவரின் அதிசிறந்த நலனே உயரிய முக்கியத்துவமாதல் வேண்டும்.

*வழங்கப்படும் நலன்களின் அணுக்கத்திற்கான உரிமை.*

**6.** (1) ஒவ்வொரு பிரசையும் –

(அ) பகிரங்க அலுவல்களின் நடாத்துகையில் நேரடி யாகவோ அல்லது எவரேனும் பிரதிநிதியூடாகவோ பங்கேற்பதற்கும் ; அத்துடன்

(ஆ) பொதுமக்களுக்கு அரசினால் வழங்கப்படும் சேவைக ளுக்கு அணுக்கம் பெறுவதற்கும் ;

உரிமையையும் வாய்ப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கத்திற்கு “பகிரங்க அலுவல்களை நடாத்து தல்” என்னும் சொல்லமைப்பு ஏதேனும் எழுத்திலான சட்டத்தி னால் அல்லது அதன்கீழ் ஏதேனும் குறிப்பிட்ட அதிகாரசபைக்குப் பிரத்தியேகமாகப் பொறுப்பிக்கப்பட்ட எவையேனும் அலுவல்க ளின் நடாத்துகையை உள்ளடக்குதலாகாது.

*இச்சட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் வலுவுக்கிடப்படுதல், இது உயர்நீதிமன்றம் நியாயாதிக்கத்தைப் பிரயோகித்தல்.*

**7.** (1) ஆளொருவர் இச்சட்டத்தின் 2 ஆம், 4 ஆம், 5 ஆம் அத்து டன் 6 ஆம் பிரிவுகளின்கீழ் எந்த மனித உரிமைக்கு உரித்துடைய வராகின்றாரோ அந்த ஏதேனும் மனித உரிமை நிறைவேற்றுத் துறை அல்லது நிர்வாகச் செயற்பாட்டின் மீறுகைக்கு அல்லது உடனிகழக்கூடிய மீறுகைக்கு எதிராக மேல் நீதிமன்றத்திற்கு முகவரியிட்டனுப்பப்படும் மனு என்ற வகையில் விண்ணப்பிப்பதற் கும் அத்தகைய மனுவில் வேண்டப்படவேண்டியவாறான அத்த கைய நிவாரணத்திற்கு அல்லது மாற்றீட்டிற்கு வாதாடுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பிரிவுகளால் ஏற்பாடு செய்யப்பட்ட எவையேனும் மனித உரிமைகள் மீறப்படுகின்றது அல்லது மீறப்படப்போகின்றது எனச் சார்த்து ரைக்கும் ஆளொருவரால் தாமாகவோ அல்லது அவர் சார்பில் வேறு எவரேனும் ஆள் ஊடாகவோ விடயத்திற்கேற்ப சார்த்து

ரைக்கப்பட்ட மீறுகையில் அல்லது உடனிகழக்கூடிய மீறுகையின் மூன்று மாதங்களுக்குள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் மேல் நீதிமன் றத்தின் நியாயாதிக்கம் கோரப்படலாம் :

ஆயின் எவ்வாறாயினும், மேல் நீதிமன்றத்தின் நியாயாதிக்க மானது அரசியலமைப்பின் அத்தியாயம் III அல்லது அத்தி யாயம் IV என்பதனால் வெளிப்படுத்தப்பட்ட அல்லது அங்கீகரிக் கப்பட்ட அடிப்படை உரிமைகளின் அல்லது மொழி உரிமைகளின் நோக்கெல்லைக்குள் வரும் ஏதேனும் மனித உரிமை மீறல் ஒன்றின் அல்லது உடனிகழக்கூடிய மீறல் ஒன்றின்மீது நீதி காணு தலுக்கு நீடித்தலாகாது.

(3) வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் முரணாக எது எவ்வாறிருப்பினும், மேல் நீதிமன்றம் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரி வின்கீழ் அதற்குச் செய்யப்பட்ட மனுவொன்று தொடர்பிலான வழக்கு நடவடிக்கையின் ஏதேனும் கட்டத்தில் தோதானதென அது கருதுமிடத்து, விசாரணையொன்றுக்காகவும் அறிக்கைக்காகவும் அத்தகைய கருமத்தை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வுக்கு ஆற்றுப்படுத்தலாம் என்பதுடன் அந்நோக்கத்திற்கென நீதிமன்றத்தால் விதித்துரைக்கப்படவேண்டியவாறான அத்த கைய காலத்திற்குள் அதன் அறிக்கையை மேல் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்குமாறு அத்தகைய ஆணைக்குழுவை வேண்டுகோளும் விடுக்கலாம்.

(4) மேல் நீதிமன்றம் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதற்குச் செய்யப் பட்ட மனுவொன்றில் வேண்டப்பட்ட நிவாரணத்தை அளிப்பதற்கு அல்லது அத்தகைய வேறு ஏதேனும் நிவாரணத்தை அளிப்பதற்கு அல்லது வழக்கின் சூழ்நிலைகளில் நீதியானதும் ஒப்புரவானதும் என அது கருதக்கூடிய அத்தகைய பணிப்பை ஆக்குவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்கு "ஆள்" ஒருவர் என்பது, ஒரு சிறுவரையும் உள்ளடக்கும்.

*உயர்நீதிமன்றத் திற்கு மேன் முறையீடு செய்யும் உரிமை.*

**8.** இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் கோப்பிடப்பட்ட ஏதேனும் மனுவில் மேல் நீதிமன்றத்தால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றி னால் இடருற்ற ஆளெவரும் அத்தகைய கட்டளைக்கெதிராக உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யும் உரிமையொன் றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**9.** (1) அமைச்சர் இச்சட்டத்தின் கோட்பாடுகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயனளிக்கும் நோக்கத்திற்கு ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். *ஒழுங்கு விதிகள்.*

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டின் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்கு விதியின் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதிப்படக்கூடிய விரைவில் அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத்தின் முன்னிலைக்குக் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அங்கீகாரம் மறுக்கப்பட்ட அத்தகைய தேதியிலிருந்து ஆனால் அதற்கு முன்னர் அதன்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படும் தேதியைப் பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**10.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி — *பொருள் கோடல்.*

"சிறுவர்" என்பது, பதினெட்டு வயதிற்குட்பட்ட ஆளொருவர் எனப் பொருள்படும் ;

"மேல்நீதிமன்றம்" என்பது, இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றம் எனப் பொருள்படும் ;

"இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு" என்பது, 1996ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு என்று பொருள்படும்.

**11.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*